மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. க. நரசிம்மபல்லவன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைச் சுத்திகரிப்பு செய்து குடிதண்ணீராகக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. த. பழனி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஆம்பூர் பகுதிக்கு மட்டும் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற அனைத்து நகராட்சிகளுக்கும், குடிநீர் பாலாற்றிலிருந்துதான் வழங்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் எல்லாம் குடிநீர் திட்டங்களை பாலாற்றிலிருந்து தான் நிறைவேற்றி இருக்கின்றன. இதற்காக அரசு பல கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. அந்தக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் தற்போது பாழடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்படி பல கோடி ரூபாய் அளவுக்கு திட்டங்கள் தீட்டிக் கொடுக்கப்படுகிற குடிநீர், பாலாற்றில் தோல் கழிவு நீர் கலக்கப்படுவதன் காரணத்தால் கெட்டுப் போய்விடுகிறது. எனவே குடிநீருக்காக மிகப் பெரிய திட்டங்களைத் தீட்டுவதைக் காட்டிலும் பாலாற்றில் கலக்கிற அந்தத் தண்ணீரைத் தடுத்து நிறுத்தினாலே அங்கேயிருக்கிற அந்த பாலாற்றுத் தண்ணீரைக் குடிக்கின்ற மக்கள் அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றி சொல்வார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி ஆலோசிக்கலாம்.

மணலி புழல் பகுதியில் தூய்மையான குடிநீர்.

323—(*வினா எண். 4204) **திரு. ஜி. கே. ஜெ. பாரதி**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையை அடுத்துள்ள மணலி, புழல் பகுதி மக்களுக்கு தூய்மையான குடிநீர் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி சின்னசேக்காட்டிற்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த, ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. புழல் பேரூராட்சிக்கு ரூ. 1.63 இலட்சம் செலவில் குடி-நீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: பேரவையின் தலைநாயகர் அவர்களே, மணலி, புழல் போன்ற பகுதிகளிலிருக்கின்ற மக்களுக்கு உதவுவதற்காக மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் பல இலட்சம் ரூபாய் கொடுக்க முன்வந்திருக்கிறது. அவர்கள் வழங்குகிற அந்த நிதியை அரசு பெற்றுக் கொள்ளுமா ? அப்படிப் பெற்றுக் கொள்கிறபோது ஒரு நிபந்தனையைச் சொல்கிறார்கள். அதாவது தங்களுடைய டெக்னோகிராட்டை வைத்துக்கொண்டு அதனை விரைவாக முடித்துவிடுகிற சூழ்நிலையைப் பெறுவோம்; அதற்கு தாங்கள் அரசிடம் இருந்து தகுந்த ஆலோசனை பெறுவீர்களா என்று கேட்கிறார்கள். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அறிக்கைகள் எதுவும் அவர்களிடத்திலிருந்து வரவில்லை, வந்த பிறகு அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு தலைநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலம் முழுவதிலும் வறட்சி இருக்கக் கூடிய சூழ்நிலையில், குறிப்பாக குடி-தண்ணீர் பிரச்சினை அதிக மாக நிலவிக் கொண்டிருக்கிற நிலையில், சில தொழில்அதிபர் களும், அறக் கட்டளைகளும் தாமாகவே முன் வந்து கொடை அளிக்கும்போது, அந்த உதவிகளை அரசு ஏற்றுக் கொள்ள முன் வருமா? அதோடு மணலி பகுதி பௌதிக தொழிற்கூடங்கள் அதிகமாக இருக்கிற பகுதியாக இருப்பதால், அந்தத் தொழில் கூடங்களால் நிலத்தடி நீர் பாழாகாமல் இருக்க ஒரு மாஸ்டர் பிளானை தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம்: தலைவர் அவர்களே, குடி-தண்ணீருக்காக சிற்சில சின்ன உதவிகளைப் பெறலாம். இருந்தாலும் நாம் இப்போது மத்திய அரசின் மூலமாக உலக

வங்கியிடம் உதவிபெற்று திட்டங்களை செய்து வருகிறோம். ஒரு சில தொழில் அதிபர்களிடம் நன்கொடை வாங்கி செய்வதால் புண்ணியம் ஏற்பட்டு விடாது.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, சென்னைக்கு புறநகரப் பகுதியிலிருந்துதான் தண்ணீர் வருகிறது. குறிப்பாக ரெட்ஹில்ஸ் பகுதியிலிருந்து வருகிறது. ஆனால் அந்த செங்குன்றம் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அவர்களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டு தண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது சென்னையின் எல்லாப் பகுதிகளுக்குமே செங்குன்றம் பகுதியில் இருந்துதான் தண்ணீர் வருகிறது. அந்தப்பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வேண்டுமானால் ஆழ் துளை கிணறுகளைப் போட்டு தண்ணீர் தர ஏற்பாடு செய்யலாம்.

நாகர்கோயில் நகராட்சியில் பாதாளச் சாக்கடை.

324—(*வினா எண் 9135) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை அமைக்க அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) நகார்கோவில் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 930 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட பராமரிப்புச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 32.5 இலட்சம் ஆகும். நகராட்சியின் நிதி நிலைமையைக் கருதி இத்திட்டத்தை ஏற்க நாகர்கோவில் நகராட்சி முன்வரவில்லை ஏனைய நகராட்சிகளிலும் பெரும் முதலீடு தேவைப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை ஏற்பதில் இந்நிலையே உள்ளது. அரசு